# கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

# பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரல்

01. கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் சார்பாக அமைச்சுப் பெறுகைக் குழுவினால் பின்வரும் Iஆம் மற்றும் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக 2025-10-09ஆம் திகதி வரையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. அமைச்சு வளவினுள் உள்ள வாகனங்கள்

| தொ. இல. | வாகனத்தின் பதிவிலக்கம் | வகை/ மாதிரி |
|---|---|---|
| 01 | JP-3842 | BAJAJ/WIND/Motor Cycle |
| 02 | JP-3827 | BAJAJ/WIND/Motor Cycle |
| 03 | JP-3834 | BAJAJ/WIND/Motor Cycle |
| 04 | JT-2947 | TATA/LPT1109/Motor Lorry |
| 05 | GZ-8651 | BAJAJ BOXER CT-DELUKE/ Motor Cycle |

II. தம்புத்தேகம, குயீன் எலிசபெத் மாவத்தை, வ/ப மகாவெலி கால்நடை தொழில்முயற்சி நிறுவனத்தில் உள்ள வாகனங்கள்

| தொ. இல. | வாகனத்தின் பதிவிலக்கம் | வகை/ மாதிரி |
|---|---|---|
| 01 | 48-7645 | TATA Motor Lorry (31313/42CLOSED) |
| 02 | 27-7150 | TATA Motor Lorry(1210SE/42) |
| 03 | 42-1471 | HINO Motor Lorry (OD171KA) |
| 04 | 41-8820 | ISUZU Motor Lorry (F.S.R.11) |
| 05 | 41-6839 (பாவிக்க முடியாதது) | ISUZU Motor Lorry |

02. மேற்கூறிய Iஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு வளவிலும் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை வ/ப மகாவெலி கால்நடை தொழில்முயற்சி நிறுவனம், குயீன் எலிசபெத் மாவத்தை, தம்புத்தேகம எனும் முகவரில் 2025-09-18ஆம் திகதி முதல் 2025-10-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. விலைமனுதாரர்களால் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் ஒவ்வொரு வாகனத்திற்காகவும் வெவ்வேறாக மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா தொகையை கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாம் மாடியிலுள்ள நிதிப் பொறுப்புப் பிரிவிற்குச் செலுத்த வேண்டும். அதற்குரித்தான பற்றுச்சீட்டை அந்த மாடியிலுள்ள நிர்வாகம் மற்றும் பெறுகைக் கிளைக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2025-09-18ஆம் திகதி முதல் 2025-10-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குறித்த விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதி சகிதம் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு உறைகளில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அந்த இரு கடித உறைகளையும் பெரிய உறையொன்றினுள் இட்டு செயலாளர், கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, 80/5, ''கொவிஜன மந்திரய'', ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2025-10-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லாவிடில் கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள நிர்வாகம் மற்றும் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல் - 2025'' எனக் குறிப்பிட வேண்டும் என்பதுடன் வாகனத்தின் பதிவிலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. விலைமனு ஆவணத்தில் வாகன இலக்கத்திற்கு எதிரில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறித் தொகையை ஒவ்வொரு வாகனத்திற்கும் வெவ்வேறான வகையில் கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாம் மாடி நிதிப் பொறுப்புப் பிரிவிற்குச் செலுத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுயை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

07. 2025-10-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. மேற்கூறிய பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வது தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**